வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
------------------------------------------------------------
யாழ்ப்பாண மாவட்டம்
---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்
-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்
--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

(அ) நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | பொறுப்புகள் | |
|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 03 | 22இ391இ851 |
| விடுபாடுகள் | 01 | 769இ608 |

(ஆ) அரசினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 08 எண்ணிக்கையான மோட்டார் வாகனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| <u>வாகனத்தின் வகை</u> | <u>வாகன இலக்கம்</u> |
|---|---|
| உழவு இயந்திரம் | றீபுது 2730 |
| உழவு இயந்திரம் | நீசுயு 2808 |
| உழவு இயந்திரம் | - |
| உழவு இயந்திரப் | றீசுடீ 8275 |

| | |
|---|---|
| பெட்டி | |
| உழவு இயந்திரப் பெட்டி | றீசுயு 1592 |
| பிக்கப் | 252 -6561 |
| கலி பவுசர் | - |
| நீர் பவுசர் | - |

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை
---------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை
---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 35இ546இ745 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு
----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்
-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 27இ675 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாடு செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா 22இ528இ336 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 7இ276இ990 அதிகரித்துக் காணப்பட்டது. ஆயினும் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 4இ859இ401 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

--------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 643 | 125 | 1,859 |
| குத்தகை வாடகைகள் | 9,900 | 12,237 | 130 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 845 | 978 | - |
| வேறு வருமானங்கள் | 39,083 | 44,408 | 27,771 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

-----------------------------------------

ரூபா 1,989,606 பெறுமதியான ஆதனவரி, சந்தைக்கடை வாடகை மற்றும் குத்தகை அரசிறைக்கடனாளிகள் நிலுவையை அறவிடுவதற்கு சயையினால் எந்தவித ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான பாதிப்பு

---------------------------

1999 ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்ட போதும் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 500இ800 பெறுமதியான செலவினத்திற்கு மீளளிப்பு கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

---------------------------

i. வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களிலிருந்து 2011 ஒக்ரோபர் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கு பெறப்பட வேண்டிய ரூபா 371இ000 பெறுமதியான நீதிமன்றத் தண்டப் பணங்கள் பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

ii. வேவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களிலிருந்து 2010, 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளுக்கென பெறப்பட வேண்டிய நீதிமன்றக் குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் முறையே ரூபா

1,259,250 ரூபா 814,125 மற்றும் ரூபா 3,984,500 இனை அறவிடுவதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

---

i. 2010 மற்றும் 2011 மற்றும் 2012 யூலை தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிகளுக்கென காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக்கட்டணம் முறையே ரூபா 14இ722இ337, ரூபா 17,878,713 மற்றும் ரூபா 11,319,972 கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

ii. 2006, 2011 மற்றும் 2012 ஜனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதிகளுக்கென காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் பெறுமதி ரூபா 21இ712இ748 இற்கு சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

---

2.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

---

சபையில் 04 எண்ணிக்கையான பௌதீக வளங்கள் கடந்த இரண்டு வருடங்களாக பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.

விபரம் வருமாறு :

<u>வாகன வகை</u>

i. மோட்டார் சைக்கிள்

ii. இரண்டு சில்லு உழவியந்திரம்

iii. இரண்டு சில்லு உழவியந்திரப்பெட்டி

iv. பிக்கப்

2.4.2 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

---

பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ரூபா 46,000 பெறுமதியான அறவிடப்படாத பதவியினர் கடன் நிலுவைகளை பிணையாளிகளிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மீதியாகக் காணப்படுகின்றது.

2.4.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

---

கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 38,133,514 ஆகக் காணப்படுகின்றது.

விபரம் வருமாறு :

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 37,588,378 |
| களஞ்சியப் பொருட்கள் | 545,136 |
| | 38,133,514 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இனங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 33 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வரி மதிப்பீட்டு எழுதுநரால் வரி இறுக்கத் தவறுவோரின் பட்டியலொன்று தவிசாளருக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 76 | ரூபா 130,276 பெறுமதியான வாடகைகள் மற்றும் குத்தகைகள் கொடுப்பனவு தாமதம் பற்றி அரசிறை எழுதுநரால் தவிசாளருக்கு அல்லது செயலாளருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகள் மற்றும் தண்டப் பணங்களின் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி

| | |
|---|---|
| (i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 234 | 06 மாதங்களுக்கு மேல் வசூலிக்கப்படாத ரூபா 10,500 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ii) நிதி ஒழுங்குவிதி இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 80,548 பெறுமதியான நானாவித வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) வடமாகாண சபை நிதி ஒழுங்கு விதி

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 101 மற்றும் 102 | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.6 சிக்கனமற்ற கொடுப்பனவு

---------------------------------------

தாபன விதிக் கோவையின் அத்தியாயம் ஏஜஜ பிரிவு 3.2 இன் பிரகாரம் நாளாந்த செயற்பாடுகள் சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுத்தப்படாமையினால் சபையின் நாளாந்த செயற்பாடுகளாகிய இறுதிக் கணக்கு தயாரித்தல் செயற்பாடுகளுக்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கு நடைமுறையாண்டில் ரூபா 27,375 மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பது சிக்கனமற்ற கொடுப்பனவாகும்.

2.7 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

(அ) செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

------------------------------------------------------------------------------

i. 2011 இல் சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 284,648 பெறுமதியான மண்டான் குப்பை கொட்டும் இடத்திற்கான எல்லைச் சுவர் அமைத்தல் வேலைத்திட்டம் நடைமுறையாண்டு இறுதிவரை நடைமுறைப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ii. நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட 17 மூலதன வேலைகள் நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் காரணமாக எதிர்வரும் காலங்களில் செயற்படுத்தவென ரூபா 8,441,147 சில்லறைக் கடனாளிகள் கணக்கில் எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டம்

-----------------------------------------------------------------

நடைமுறையாண்டில் நிறைவேற்றவென பாதிடப்பட்ட ரூபா 1,800,000 பெறுமதியான ஸ்ரீ முருகன் கொலனி வீதி புனரமைப்புச் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.

2.8 செயற்பாடுகளின் செயற்திறனின்மை

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

i. 2010, 2011 ம் ஆண்டுகளில் பிடித்து வைக்கப்பட்ட ரூபா 381,895 பெறுமதியான பிடிபணங்கள் குறித்த ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. சனசமூக நிலையங்களுக்குச் செலுத்துவதற்கென 2007 இல் இருந்து சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட சனசமூக நிலைய நன்கொடைகள் ரூபா 65,000 அறிக்கையிடும் திகதி வரை குறித்த சனசமூக நிலையங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

iii. 2011, 2012 ம் ஆண்டுகளில் சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 134,262 பெறுமதியான நிதி குறித்த நபர்களுக்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை.

2.9 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு

ii. நிலையான சொத்துக்கள்

iii. கணக்கீடு

iv. நன்கொடை

v. நானாவித வைப்புக்கள்